REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 4உ செவ்வாய் (18—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 5உ புதன் (19—6—57) [இதழ் 3

முதல் 5-ஆண்டு திட்டம் நிறைவேறிய விதம்

முதல் ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறிய விதம் குறித்து திட்டக்குழு கணக்குத் தந்திருக்கிறது.

மொத்தமாக முதல் திட்டத்திற்கு ரூ. 1960 கோடி செலவிடப்பட்டது; இந்தத் தொகை ரூ. 752 கோடி (38 சதவிகிதம்) அதிக வரி விதிப்பு, இரயில்வே உபரி வருமானம் இவற்றின் மூலமும், பற்றாக்குறை நிதிவழி மூலம் (நோட்டடித்தல் மூலம்) ரூ. 420 கோடியும் (21 சதவிகிதம்) சிறு சேமிப்பு, மற்றும் கடன் மூலம் ரூ. 304 கோடியும் (16 சதவிகிதம்) மார்க்கட் கடன் மூலம் ரூ. 205 கோடியும் (10 சதவிகிதம்), இதர மூலதன வரவுகள் ரூ. 91 கோடியும் (5 சதவிகிதம்), அன்னிய உதவி ரூ. 188 கோடியும் (10 சதவிகிதம்) என்ற வகையில் திரட்டப்பட்டது

உழைப்பு மதிக்கப்பட வேண்டுமானால்.........!

உழைப்பாளி முதலில் மதிக்கப்பட வேண்டும்

ஊதிய உயர்வு கேட்டால் போலீசைக் காட்டி மிரட்டுவது உழைப்பை மதிப்பதாகாது

பிரம்மனோடு ஒப்பிட்டு ஏமாற்றியது போதும்

தொழிலாளரிடையே அண்ணா முழக்கம்

சென்னை, ஜூன் 18—

"உழைப்புக்கு மதிப்பளிப்பது உண்மையாக இருக்குமானால் உழைப்பவனுக்கு முதலில் மதிப்பளிக்க வேண்டும். உழைப்புக்கு மதிப்பளிப்பது உண்மையிலேயே உள்ளத்தைத் திறந்து பேசுகின்ற வாக்கியமானால், அவ்வளவு மதிப்பான உழைப்பைச் செய்கின்ற பாட்டாளி பிய்ந்துபோன குடிசையில் இருந்திருப்பானானால், அதற்கு உண்மையிலேயே மதிப்பளித்ததாகாது.

"'உழைப்பிலே எங்களுக்கு மதிப்பிருக்கிறது' என்று எடுத்துச் சொல்லி, உழைப்பாளி ஒரு அணா கூலி அதிகமாகக் கேட்டால், போலீஸ்காரர்களைவிட்டு விரட்டச் சொல்லுவதும், போலீஸ்காரர்களும் தாங்களும் ஒருவகையில் உழைப்பாளிகள்தான் என்ற உணர்ச்சி பெற்று, 'எங்களுக்கும் கூலி போதாது' என்று கேட்டால், 'உங்களை உதைக்க மலபார் போலீஸ் இருக்கிறது' என்று சொல்வதும் உழைப்புக்கு மதிப்பளிப்பதல்ல; ஆகவே, உண்மையிலேயே, 'உழைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும்' என்பது நாட்டை ஆள்பவர்களின் உண்மையான எண்ணமாக இருக்குமானால், உழைப்பவனைப் பார்த்தால் மதிப்பானவனாக, சமுதாயத்தில் கருதப்பட வேண்டும்.

"ஆனால் இன்றையதினம் உழைப்பாளியைப் பார்த்தால் மதிக்கப்படுபவனாகத் தெரியவில்லை; அவன் ஆடையின் அலங்கோலமும், அவனுடைய எண்ணெய் காணாத தலையும், ஒளியில்லாத கண்களும், நிமிர்ந்து நிற்க முடியாத முதுகும், கூனிப்போன முதுகெலும்பும், நடந்துசெல்லுகின்ற நேரத்திலே அவன் தத்திச் செல்லுகிறானா— ஊர்ந்து செல்லுகிறானா என்று கண்டுபிடிக்க முடியாத நிலையையும் பார்த்தபிறகு, 'போகிறானே, இவன் யார் தெரியுமா?'—'உழைப்பாளி; 'உழைப்புக்கு என்ன மதிப்பு தெரியுமா?'—'நேரு அவர்களே உழைப்பு மதிப்பானது என்று சொல்லியிருக்கிறார்; அது மட்டுமல்ல—பெரிய கவிவாணர்கள், 'உழைப்பாளியும் பிரம்மனும் ஒன்றுதான்; ஏனென்றால் பிரம்மனும் பொருட்களை சிருஷ்டிக்கின்றான்; உழைப்பாளியும் பொருட்களை சிருஷ்டிக்கின்றான்; அதனால், பூலோகத்தில் பிரம்மாக்கள் யார் என்றால், பாட்டாளிகள்தான்' என்று கவிவாணர்கள் பாடியிருக்கிறார்கள்'—என்று பாட்டாளிகள் சமுதாயத்தை இத்தனை காலமும் ஏமாற்றியது போதும்; இனிமேலாவது ஏமாற்றாமல் இருக்க வேண்டும் என்று நான் பெரிதும் விரும்புகிறேன்,"

—என்று, அண்ணா அவர்கள், நேற்று மாலை நடைபெற்ற சென்னை 'ஜெனரல் அண்டு இண்டஸ்டிரியல் ஒர்க்கர்ஸ் யூனியன்' 13-வது ஆண்டு விழா—மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"உண்மையிலேயே இப்படிப்பட்ட தொழிலாளர் நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்குத் தங்களை அடகு வைத்துவிடாமலும் பலியாகிப் போகாமலும், அதே நேரத்தில் எந்த அரசியல் கட்சியிலுள்ள முற்போக்கான கருத்துக்களும் தங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்திலும் இத்தகு பாட்டாளிகளின் அமைப்புகள் நடைபெற்று வருவதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

கொள்வதும் பிடிக்காத காரியமாகும் என்பதை நான் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

"ஆனால் நம்முடைய நாட்டில் தொழிலாளர் நிறுவனம் என்பது, பணக்காரனுக்கு விரலில் மோதிரமும் கையிலே கைக் கடியாரமும் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோல், அரசியல் கட்சிகளுக்கு அலங்காரமாக இரண்டொரு தொழிலாளர் ஸ்தாபனங்களும் இருக்க வேண்டும்

தொழிற் சங்கங்களை அடகு வைக்காதீர்!

"நீண்டநாளாகவே எனக்கு, இப்படிப்பட்ட தொழிலாளர் இயக்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு அடகு வைக்கப்படுவதும், அரசியல் கட்சிகள் தொழிலாளர் ஸ்தாபனங்களில் பெறுகின்ற செல்வாக்கை வைத்துக்கொண்டு தங்கள் தங்கள் கட்சிகளின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

"அதனால்தான் இந்தத் தொழிலாளர் ஸ்தாபனம் எந்த அரசியல் கட்சிக்கும் கட்டுப்படாமல், எல்லா அரசியல் கட்சிகளிலும் கிடைக்கக்கூடிய முற்போக்கானவர்களைத் தங்களுக்கு உறுதுணையாக வைத்துக்கொண்டு, தொழிலாளருக்கு ஏற்படக்கூடிய தொல்லைகளை நீக்கக்கூடிய வகையில் பணியாற்றிவருவதை நான் பெரிதும் மதித்து வரவேற்கிறேன்.

ஆசியாவின் பெரும் புரட்சி வீரரை அவமதிப்பதா?

"ஆகவேதான், இப்படிப்பட்ட அமைப்புகள் என் போன்றோரை அழைக்கும்போது, நாங்கள் மிக விருப்பத்தோடு இப்படிப்பட்ட விழாக்களில் கலந்து கொள்கிறோம்.

"நம் நாட்டில்-நம் நாட்டில் மட்டுமல்ல-இந்தியத் துணைக் கண்டத்திலேயே -- இந்தியத் துணைக்கண்டம் என்பதைவிட ஆசியாக் கண்டத்திலேயே ஒரு மாபெரும் புரட்சி இயக்கத்தின் தலைவர் யாராவது ஒருவர் இருந்தாரென்றால் அது மறைந்த எம். என். ராய் ஒருவர்தான் என்பது என் ஆழ்ந்த நம்பிக்கை.

"நம் நாட்டில் எம். என். ராய் அவர்களை, உண்மையிலேயே புரட்சிக்காரர் அல்ல என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; பலர் அப்படி கருதிக் கொண்டிருப்பதற்குக் காரணம், தங்களை 'மாபெரும் புரட்சிக்காரர்கள்' என்று முத்திரை பொறித்துக் கொண்டிருப்பவர்கள், 'எம். என். ராய் அவர்கள் புரட்சிக்கு அப்பாற்பட்டவர்' என்று நாட்டில் ஒரு விஷயத்தைப் பரப்பி வைத்தார்கள்.

"எம். என் ராய் எப்படிப்பட்டவர் என்பதை விளக்க ஒரிரு விஷயத்தை மட்டும் உங்களிடத்தில் சொல்லவிரும்புகிறேன்.

"ரஷ்ய நாட்டில் லெனின், புரட்சி நடத்திக் கொண்டிருந்த காலத்தில், லெனினுக்குப் பக்கத்திலிருந்து கொண்டு ராய் அவர்கள் பணியாற்றினர்கள்.

"அவருடைய டேராடூன் பங்களாவில் நான் ஒரு தடவை தங்கியிருந்த காலத்தில், ஒரு நாள் ராயும், அவர் மணந்து கொண்டிருந்த ஜெர்மன் மாதும் என்னை உபசரிக்கும் முறையில் 'புலவு' செய்து தந்திருந்தார்கள்; நான் அவரிடம் கேட்டேன்—'இது என்ன சமையல்காரரைக் கொண்டு செய்தீர்களா?' — என்று! 'இல்லை, நானேதான் செய்தேன்' என்று ராய்சொன்னார்.

'உங்களுக்கு எப்படி இந்த நல்ல புலவு செய்யத் தெரிந்தது?' என்று நான் கேட்டதற்கு, எம். என். ராய், 'இதென்ன, அண்ணாதுரை; நான் செய்து போடுகின்ற புலவு இவ்வளவு நன்றாக இருக்கிறது என்று நீங்கள் புகழ்வதில் ஆச்சரியம் என்ன? லெனினே புகழ்ந்திருக்கிறார்' என்றார்.

முட்டையை உடைக்க சம்மட்டி தேடும் புரட்சி வீரர்கள்!

"லெனினுக்குப் புலவு செய்து கொடுத்த ராய், இந்த நாட்டில் புரட்சிக்காரர் அல்ல என்று, 'முட்டையை உடைப்பதற்குச் சம்மட்டியைத் தேடிக் கொண்டிருப்பவர்கள்' எல்லாம் இன்று நாட்டில் தப்பபிப்பிராயத்தைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எம். என். ராய் 'பாஷை' இங்கு புரியாமல் போனதேன்?

"என்ன காரணத்தினாலோ ராய் அவர்கள் 'பாஷை' நம் நாட்டு மக்களுக்குப் புரியாமற் போய்விட்டது. நான் 'பாஷை' என்று எடுத்துச் சொல்வது அவருடைய எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டு சொல்லுகிறேன். அவருடைய எண்ணம் 21-ம் நூற்றாண்டுக்குத் தயாரிக்கப்பட வேண்டிய எண்ணமாகும்; அதை இந்த நாட்களில் சொன்னதால் நம் நாட்டில் பல பேருக்கு அது புரியாமல் போய்விட்டது. புரியாமற்போன காரணத்தால் ராய்க்கு நம் நாட்டில் கிடைக்க வேண்டிய அளவுக்குச் செல்வாக்கு கிடைக்கவில்லை.

"அவருக்குத் தொழிலாளர் இயக்கத்தைப் பற்றியும், தொழிலாளர்களைப் பற்றியும் மிகத் திட்டவட்டமான கொள்கைகள் உண்டு. 'தொழிலாளர் இயக்கங்கள், அரசியல் கட்சிகளுக்குப் பலியாகக் கூடாது' என்பது மாத்திரமல்ல, எம். என். ராய் அவர்கள் கடைப்பிடித்துவந்த கொள்கை; 'தொழிலாளர்கள் கடைசி வரையில் தொழிலாளர்களாகவே இருக்கவேண்டும்' என்ற தத்துவத்தையும் அவர் ஏற்றுக்கொண்டதில்லை.

தொழிலாளர், என்றென்றும் தொழிலாளராகவே இருக்க வேண்டுமா?

"என்னைப் பொறுத்தவரையில் நானும் கூறுவேன்—தொழிலாளர்கள் என்றென்றும் தொழிலாளர்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதும், அவர்களை நடத்திச் செல்வதற்கென்று விரல் விட்டு எண்ணக்கூடிய முதலாளிகள் ஒவ்வொரு நாட்டிலும் இருக்க வேண்டும் என்பதும் அரசியல் உலகத்தில் ஏற்பட்டுவிட்டுப் போன, காட்டுமிராண்டித்தனமே ஒழிய நாகரிகத்தின் சின்னங்கள் அல்ல!

"ஒரு சிலர் முதலாளிகளாகவும், ஓராயிரம்-ஒரு இலட்சம் மக்கள் தொழிலாளர்களாகவும் இருந்துகொண்டு இடையிலே, முதலாளிகள் தொழிலாளிகளைக் கசக்கிப் பிழியாமல் பார்த்துக்கொள்வதற்கு சிலர் தர்மசிந்தனையால் தூண்டப்பட்டும், சிலர் சட்டத்தால் உந்தப்பட்டும், மற்றும் சிலர் கட்சியினால் தூண்டப்பட்டும் பணியாற்றிக்கொண்டிருக்கும் நிலைமைதான் உலகத்தில் என்றென்றும் இருக்கும் என்று யாரும் கருதத் தேவையில்லை.

"தங்களுடைய தொழிலின் மேன்மையையும் தங்கள் தொழிலாலேதான் உலகம் நடத்தப்படுகின்றது என்ற பேருண்மையையும், தங்கள் தொழில் திறமையினாலேதான் உலகத்தில் நேர்த்தியான கட்டிடங்களும் கண்ணுக்கு விருந்தான காட்சிகளும், வாழ்க்கைக்கு தேவையான வசதிகளும் உண்டாகின்றன என்பதையும் தொழிலாளர்கள் ஓரளவுக்கு உணரத் தலைப்பட்டிருக்கின்றனர்.

"அதுபோலவே, தொழிலாளர்களாலே இந்த நாட்டுக்குத் தேவையான நல்ல காரியங்கள், உலகத்திற்குத் தேவையான உன்னதப் பொருட்கள் செய்து தரப்படுகின்றன என்ற உண்மையை தொழிலாளர் அல்லாதவர்களாக இருக்கின்ற மக்களும் ஓரளவுக்கு உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கின்றனர்.

"மாட மாளிகையில் உலாவிக் கொண்டிருக்கும் 'மேனுமினுக்கி'கள் அங்கிருந்து வழுக்கிக் கீழே விழுந்தால், 'இந்தப் படிக்கட்டைக் கட்டிய பாட்டாளி யார்?' என்று அன்றையத் தினம் மட்டுமே பாட்டாளியைத் திட்டுவதற்கு நினைத்துக்கொள்கின்றார்கள்.

"படிக்கட்டில் இலாவகமாக ஏறி ஊஞ்சலில் உட்கார்ந்து, மின்சாரத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளி பக்குவமாக அமைத்துத் தந்திருக்கின்ற மின்சார விசிறி ஓடிக்கொண்டிருக்கின்ற நேரத்தில்

([illegible])

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 18—6—57 செவ்வாய்

துணிவு பிறக்குமா?

‘எதிர்காலம் சுபீட்சமாகுது; சந்ததிக்கு வாழ்வு மலருது’ என்று டெல்லிப் பெரியவர்கள் எந்த ஐந்தாண்டுத் திட்டங்களைக் காட்டி குறி சொல்லுகிறார்களோ அந்த ஐந்தாண்டுத் திட்டங்கள், தென்னாட்டு மக்களின் எதிர்காலத்தை துளியும் பிரகாசமாக்கப் போவதில்லை—தென்னவரின் பிற்காலத்தில் எந்தவித மலர்ச்சியையும் தோற்றுவிக்கப் போவதில்லை—ஏனெனில், அவற்றில் தென்னவருக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை—அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மைக்காகப் பரிந்து பேசுகிறவர்களாய் நாம்தான் இருந்துவருகிறோம்.

‘பெரியவர்’கள் புரிந்த இந்த வஞ்சனையை நாம் கூறுகிறோம் என்பதாலேயே, மறைக்கவும் மறுத்துப் பேசவும் முற்பட்டனர், எல்லா ‘அகில இந்தியா’க்களும்! ஆனாலும் நேர்மை வழி செல்வதில் இஞ்சிற்றேனும் விருப்பம் கொண்ட சிலர், நாம் எடுத்துரைத்த உண்மைகளை உணர்ந்து, தங்கள் வாயாலும் குரல் கொடுத்தனர்--கொடுத்து வருகின்றனர்.

சராசரிப் பார்வைச் சக்தியுடைய எந்த அரசியல்வாதியின் கண்ணிலிருந்தும் தப்பிவிட முடியாத ஒளிமிகுந்த இந்த உண்மையை, மறைப்பதில் சில காலமும், மறுப்பதில் சில காலமும் தள்ளினர், இந்த மாநில காங்கிரஸ் ஆட்சியாளர்!

இப்படிச் செய்வதின் மூலம் தங்களது வடநாட்டு எசமானர்களின் புன்னகைக்காக, இந்த நாட்டு மக்களுக்குப் பெரியதொரு துரோகம் புரிகிறோம் என்பதை அவர்கள் மனச்சாட்சி அறிவுறுத்தாமலும் இருக்கவில்லை என்பதை அவர்களில்சிலர் தங்கள்எசமானர்களின் கண்காணிப்பு—சக்தி குன்றியதாயுள்ள சில இடங்களில் ‘திட்டங்களில் நியாயமான பங்கு கிடைக்கவில்லை’ என்ற உண்மையை, பாதுகாப்பான வார்த்தைகளால் வெளிப்படுத்தியிருப்பதிலிருந்து மக்கள் அறிந்து கொள்ளமுடியும்.

ஒப்பிய மறுகணமே, வீராப்பு உணர்ச்சி மேலிடும்போது, ‘யார் சொன்னது அநீதி’ என்று, குட்டிக்கரணம் அடிக்கவும் தயங்கியதில்லை இந்தக் காந்தியவாதிகள்!

கண்ணை உறுத்தும் இந்த தெளிவான அநீதிக்கு எதிராக, அநீதி இழைத்த டில்லி பாதுஷாக்களுடன் போராடவேண்டும் என்ற இயற்கையான உணர்வு சென்னை காங்கிரஸ் ஆட்சியாளருக்கு மட்டுமல்ல—எல்லா ‘அகில இந்தியா’க்களுக்குமேதான் இல்லாமலிருந்து வருகிறது.

நியாயங்களுக்காகப் போராட வேண்டும் என்ற இந்த உணர்வை—நீதியைச் சுதந்தரிக்கவேண்டும் என்ற பசியை ஆட்சியாளருக்கும், பிறருக்கும் ஊட்டுவதற்கு நாம் பொறுமையோடு முயற்சித்து வருகிறோம்.

நமது முயற்சி நியாயமானது என்று கூறும்வண்ணம் உள்ளது, சென்னை இந்துஸ்தான் வர்த்தகக் கழகத் தலைவர், இது குறித்துப் பேசியிருப்பது.

‘இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல — மிகவும் குறைவானது’ என்ற அவரது கணக்கு, டெல்லிமீது வெறுப்பு காரணமாகவோ, வேண்டுமென்றோ நாம் குற்றஞ்சாட்டவில்லை என்பதை மெய்ப்பிக்கும் மற்றொருவரின் ஆதாரமாகும்.

‘எனவே, சென்னை சர்க்கார், மேலும் அதிகமான தொகை ஒதுக்கித் தருமாறு டெல்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டும்’ என்ற அவரது கருத்து, நாம் ஆட்சியாளருக்கு ஊட்டவிரும்பும் போராட்ட உணர்வு தேவை என்பதை எடுத்துரைப்பதாகும்.

ஆனால் இந்த உண்மையின் படப்பிடிப்புகள்—நிலைமை விளக்கங்கள் —யோசனைகள் எல்லாம், உணர்ச்சி மரத்துப்போன காங்கிரஸ் மந்திரிகளுக்கு சூடேற்றும் என்று நாம் கருதவில்லை கடந்தகால அனுபவங்கள் அதைத்தான் கூறுகின்றன.

ஆனால், அசாம் மாநிலத்திலிருந்து கிடைக்கும் மற்றொரு செய்தியேனும், இந்த மாநில மந்திரிகளுக்கு கொஞ்சம் துணிவைத் தராதா என்று நாம் ஏக்கத்தோடுஎதிர்பார்க்கிறோம்.

அசாம் மாநில காங்கிரஸ் மந்திரி சபை இராஜினாமாச் செய்யும் !

காங்கிரசார்போராட்டம்நடத்த வேண்டும் என்று துடிக்கிறார்கள் !

மந்திரி சபை அவசரமாகக் கூடியுள்ளது !

சட்டசபையில் கண்டனத் தீர்மானம் வருகிறது !

முதன் மந்திரி, எதிர்க்கட்சிக்காரர்களுடன்கூடி, என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று ஆலோசிக்கிறார் !

பிரதேசக் காங்கிரஸ் தலைவர், தேபரை டில்லி சென்று சந்தித்து முறையிட்டுள்ளார்!

இத்தனையும், ஷில்லாங் செய்தியின் சாரம்; டில்லியின் ஒரு முடிவு, சந்திக்கும் விளைவுகள் !

அசாமில் கிடைக்கும் எண்ணெயைச் சுத்திகரிக்க அசாமிலேயே ஒரு சுத்திகரிப்புத் தொழிற்சாலை வேண்டும் என்பது கோரிக்கை.

சட்ட சபைத் தீர்மானம், சட்டரீதியான ஆர்ப்பாட்டம், தூதுக்குழு முறையீடுகள் என்ற ரூபத்தில் வலியுறுத்தப்பட்ட பின்பும், டில்லி, கோரிக்கையை ஏற்கவில்லை என்றதும், காங்கிரசாரே கச்சை கட்டுகின்றனர்—‘போர் தொடுப்போம்; உரிமை பெறுவோம்’—என முழங்குகின்றனர், அசாமில்!

ஆனால், இங்கோ......!

‘சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை வேண்டும்,’ என்று கோரிக்கை எழுப்பிய எத்தனையோ காலத்திற்குப் பின்னர்தான் வடநாட்டில் பிலாய், ரூர்கேலா, துர்காபூர் என்ற—உருக்குத் தொழிற்சாலை அமைக்கப்படுகின்ற இடங்களின் பெயர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த நாட்டில், ஆளவந்தார்கள் உட்பட எந்த ‘அகில இந்தியா’வுக்கு, இந்த அநீதிக்கு எதிராகப் புருவத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணமும், துணிவும் இருந்தது? நாம்தானே தனித்து நின்றேனும் பேசுகிறவர்களாய் -- போராடுகிறவர்களாயிருக்கிறோம்!

அசாம் மாநில காங்கிரசாருக்கு உள்ள—டெல்லிக்கு எதிராக முகம் கோணுகிற துணிவேனும் இந்த மாநிலக் காங்கிரசாருக்கு இருந்தால், அந்த மாநில மந்திரிகளுக்கு இருக்கிற—‘பதவியை வீசி எறிந்து போராடுவோம்’ என்ற நியாய உணர்வும், தீரமும் இந்த மாநில மந்திரிகளுக்கு இருந்தால்...!

இதுவரையிலாவது, தங்களுக்கு வழிகாட்ட எவருமில்லையே என்பதால், உணர்ச்சியற்றுக் கிடந்ததில் நியாயமிருந்திருக்கலாம்; இனியேனும், அசாம் காட்டுகிற வழிப்படி சென்னை காங்கிரசார்—மந்திரிகள், ஐந்தாண்டுத் திட்டங்களில் தமிழகத்திற்கு டெல்லி இழைத்துள்ள அநீதிக்கு எதிராகப் போராடி நியாயமான பங்கைப் பெற முயற்சிப்பார்களா என்று, தமிழ் மக்கள் ஏக்கத்தோடு கேட்கிறார்கள்.

துணிவு பிறக்குமா?

சிக்கன நடவடிக்கை தீவிரமாகிறது?

குடியரசுத் தலைவருக்கு ‘ஞானோதயம்’

புதுடில்லி, ஜுன் 17—

இந்தியக் குடியரசுத் தலைவர் தனது மாத ஊதியத்தில் ரூ. 1,000 குறைத்துக்கொள்ள முடிவு செய்து அறிவித்திருந்தாரல்லவா? மேலும் சிக்கனமாக வாழ குடியரசுத் தலைவர் திட்டமிட்டுவருகிறாராம்; இதன் மூலம் ஆண்டுதோறும் ரூ. 2 இலட்சம் மிச்சப்படுத்த முடிவு செய்துள்ளாராம்.

சில சம்பிரதாயங்களைக் கட்டுப்படுத்துவாராம்!

பாதுகாப்பு ஏற்பாடுகளைக் குறைத்துக்கொள்வாராம்!

வேடிக்கைகள், கேளிக்கைகள் முதலியவற்றைக் குறைக்கவும் சுற்றுப் பிரயாணத்தின் போது சிக்கனத்தைக் கடைபிடிக்கவும் யோசித்து வருகிறாராம்!

இனி தனி இரயிலில் செல்ல மாட்டாராம்! தன் அலுவலகத்தில் ஆட்களைக் குறைத்துக்கொள்வாராம்! ஊழியர்களுக்குத் தற்போது அளிக்கப்படும் சலுகைகளும் குறைக்கப்படுமாம்!

5 ஆண்டுகளில்!

அஸ்வான் அணை உருவாகுமாம் !

கெய்ரோ, ஜுன் 16—

“சூயஸ்கால்வாய் மூலம் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு அஸ்வான் அணை இன்னும் 5 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும்” என்று நாசரின் அரசியல் இலாகாஆலோசகர் ஒருதேர்தல் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

முழுச் சம்பளச் சலுகை

மேலும் விரிவாகிறது

சென்னை, ஜுன் 17—

உயர்நிலைப் பள்ளிகளில், (அதாவது 4 முதல் 6-வது பாரம் முடிய) படிக்கும் குறைந்த ஊதியம் வாங்கும் அரசாங்க ஊழியர்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் முழுச் சம்பளச் சலுகை, உஷார் விடுதிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும், விரிவாக்கப்பட்டுள்ளது.

பெரிய அணுசக்தி மின்சார நிலையம்

ரஷ்யாவில் நிர்மாணிக்கப்படும்

மாஸ்கோ, ஜுன் 17—

பிரிட்டனிலுள்ள அணுசக்தி மின்சார நிலையம் 1,84,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறதாம்.

சோவியத் யூனியனில் தற்போது 5000 கிலோவாட் அணுசக்தி மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறதாம்.

இப்போது ரஷ்யா, ஆரம்பத்திலேயே 4,20,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய பெரிய அணுசக்தி மின்சார உற்பத்தி நிலையத்தை கட்டப்பட்டு வருகிறதாகச் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

விசை உற்பத்திக்குக் கடல்நீர் பயன்படும்?

இரசாயனப் பொருள்களும் கிடைக்கக் கூடுமாம்

நியூயார்க், ஜுன் 17—

கடல் தண்ணீரிலுள்ள வெப்பத்தின்மூலம் விசை உற்பத்தி செய்ய முடியுமாம்! வெவ்வேறு உஷ்ண நிலையிலுள்ள இழிநீர்த் தேக்கங்கள் இருந்தால் கடல்நீர் வெப்பத்தைப் பயன்படுத்த முடியுமாம்.

இதிலிருந்து 7,000கிலோவாட் மின்சாரமும், 40 இலட்சம் காலன் உப்பு கலப்பில்லாத நல்ல தண்ணீரும் கிடைக்குமாம்

இவற்றைத் தவிர உப்பு, மக்னீயம் முதலிய பல இரசாயனப் பொருள்களும் கிடைக்குமாம்-

செயற்கை இருதயம்!

சிகிச்சைக்குப் பயன்படும் காலம் விரைகிறதாம்!

மனிதனால் உருவாக்கப்படும் செயற்கை இருதயம் விரைவிலேயே இரண சிகிச்சைக்குப் பெரிதும் பயன்படும் காலம் விரைகிறது !

சமீபத்தில் ரஷ்யாவில் செயற்கை இருதயத்தை உருவாக்கியுள்ளனரென்றும், இரண சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளியின் உடலோடு இது பொருத்தப்படுகிறதென்றும், நோயாளியின் பலவீனமான இருதயத்திற்கு உதவியாக இந்தச் செயற்கை இருதயம் இயங்குவதினால், எவ்வித அபாயமுமின்றி இரண சிகிச்சையை நிறைவேற்ற முடிகிறதென்றும், பல்வகை மின் அணு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ள இக்கருவி தானாகவே இயங்குகிறதென்றும் செய்திகள் தரப்பட்டிருக்கின்றன.

பதினைந்து ஆண்டுகள் உழைப்பின் பலன்

எஃகு போன்ற உறுதிவாய்ந்த கண்ணாடியை உருவாக்கினர்

ரஷ்ய விஞ்ஞானிகள் இருவர், எஃகுபோன்ற ஒரு புதிய வகைக் கண்ணாடியை உருவாக்கியுள்ளனராம் ! மணல், கருங்கல் பாறைகள், களிமண், சுண்ணாம்புக் கற்கள் ஆகியவற்றிலுள்ள அலுமினியம், கால்சியம், மக்னீசியம் ஆகியவற்றைக் கொண்ட கூட்டுப் பொருள்களால் இது தயாரிக்கப்படுகிறதாம்.

இந்த புதியவகைக் கண்ணாடியை உருவாக்குவதற்கு விஞ்ஞானிகள் பதினைந்து ஆண்டுகள்வரை ஆராய்ச்சிகள் நடத்தினர். அழகும் உறுதியும் வாய்ந்த இரயில்வே கோச்சுகள், மோட்டார் வண்டிகள், அதிக பளுவில்லாத கப்பல்கள், சூட்கேஸுகள், மேஜை, நாற்காலி முதலிய பல்வகை சாமான்கள் செய்வதற்கு இந்தப் புதியவகை பயன்படுத்தப்படுகிறது.

மலேயா சுதந்திர விழா ஏற்பாடுகள்

பத்து நாட்கள் நடைபெறும்

மலேயா சுதந்திரம் பெறுவதை நாட்டுமக்கள் களிப்புடன் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

ஆகஸ்டு 30-ந் தேதி முதல் பத்து நாட்களுக்கு விழா நடைபெறுமாம்.

விழாவில் கலந்துகொள்வதற்கு 45 நாடுகளின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். விழாவில் உலகப் புகழ் பெற்ற உடற்பயிற்சி மற்ற விளையாட்டு வீரர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளுக்கும் இடம் தரப்பட்டுள்ளதாம்.

ஆகஸ்டு 31-ந் தேதியன்று மலேயாவை சுதந்திர நாடாக முதலமைச்சர் தெங்கு அப்துல் ரெஹ்மான் பிரகடனம் செய்வாராம்.

அன்று மாலை இதுவரை பிரிட்டிஷ் ஹை-கமிஷனராக பணியாற்றிய சர். டொனால்டு மெக்கல்லிவ்ரீ அவர்களுக்கு விடை அளித்து இங்கிலாந்து செல்லுவதற்கு வழியனுப்பவும் ஏற்பாடாகியுள்ளதாம்.

புதிய பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் செப்டம்பர் 2-ந் தேதி நடைபெறுமாம்.

காமன்வெல்த் நாடுகள், கொழும்பு நாடுகள், முஸ்லிம் நாடுகள், பிரிட்டிஷ் காலனிகளின் பிரதிநிதிகள் அனைவரும் விழாவிற்கு அழைக்கப்பட்டுள்ளனராம்.

மலேயாவின் வெளிநாட்டு விஷயங்களை பிரிட்டன் தன்வசம் வைத்திருப்பதே மற்ற நாடுகளுக்கு அழைப்பு அனுப்ப இயலாத நிலைக்குக் காரணம் என்று ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மலேயாவின் தொழில், வாணிபத்துறை முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் முறையில் இந்த விழாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது ஒரு முக்கிய அம்சமாம்.

பின்தங்கியவர்களுக்கு கல்விச் சலுகை

கல்வி ஆண்டில் 2 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது

புதுடில்லி, ஜுன் 17—

1957—58-ல், தாழ்த்தப்பட்டவர்கள், மலைசாதியினர், மற்றும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 2 கோடி உதவி ஊதியமாக ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

சென்ற ஆண்டில் மொத்தம் 40,000 மாணவர்கள் இதனால் பயனடைந்தனராம். இந்த ஆண்டில் ரூ. 14 இலட்சம் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதாம்.

இதைத் தவிர, இந்தியாவில் மேல் படிப்பு பயில 39,529 பேர்களுக்கும், வெளிநாடுகளில் பயில 12 பேர்களுக்கும் உதவிச் சம்பளம் வழங்கப்பட்டுள்ளதாம்.

இந்து மதத்தைக் காப்பாற்ற முயற்சியா?

மதம் மாறியவர்கள் சலுகை இழந்தவர்களாம்

பம்பாய், ஜுன் 17—

டாக்டர் அம்பேத்காரைப் பின்பற்றி சமீபகாலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கில் புத்த மதத்தில் சேர்ந்துவருகின்றனரல்லவா?

இத்தகையவர்களுக்கு சலுகைகள் அளிக்காமல் இருக்க பம்பாய் அரசாங்கம் முற்பட்டுள்ளது.

கிறித்துவ அல்லது இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களைப்போன்றே புத்த மதத்தில் சேர்ந்தவர்களும் கருதப்படுவார்களாம்!

கழகச் செய்திகள்

பாலக்கோடு:

29—4—57ல் இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் பி. எஸ். சையத் இப்ராகிம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் கண்ணதாசன், சிற்றுளி-சுப்பிரமணியம், கரிவேங்கடன் ஆகியோர் பேசினர்.

பெருந்துறை:

4—5—57ல் நடைபெற்ற தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ப. கு. சு. மணி தலைமையில் நடைபெற்றபோது தோழர்கள் நா. சுப்பிரமணியன் செயலாளராகவும், பெ. த. சான் துணைச்செயலாளராகவும், கா. சின்னசாமி பொருளாளராகவும், 9 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, கட்சி வளர்ச்சிக்கு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோவை—செல்வபுரம்:

4—5—57 இரவு 9 மணியளவில் நடைபெற்ற தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஆதிசிவம் தலைமையில் நடைபெற்றபோது, காலியாக இருந்த பொருளாளர் பொறுப்புக்கு தோழர் தேவராசுவை தேர்ந்தெடுக்கப்பட்டதோடு. நடைபெறவிருக்கும் ஆண்டு விழாவுக்கு, விழாக் குழுவினர்களாக தோழர்கள் ரங்கசாமி, பெ. தட்சிணாமூர்த்தி, அ. நெடுஞ்சேரன், மலையாண்டி, க. ஆறுமுகம் ஆகியோரையும், நாடகக் குழுவினராகத் தோழர்கள் அ. நெடுஞ்சேரன், ச. தமிழ்மணி, ச. ஆறுமுகம் ஆகியோரையும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

காரைக்குடி:

5—5—57 மாலை 6-மணியளவில் மேற்படி நகரக் கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம் மாவட்டச் செயலாளர் இ. ல. ம. சௌந்திரபாண்டியன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சி. மு. வேலன் (அண்ணாதாசன்) செயலாளராகவும், வி. சுப்பிரமணியம் துணைச்செயலாளராகவும், சோம. தியாகராசன் பொருளாளராகவும், மு. அ. கருப்புச்சாமி, இரா. தங்கவேலன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், 16 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பாராட்டு தெரிவித்தும், அழகப்ப செட்டியார் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னை 8-வதுவட்டம்:

5—5—57 காலை 10-மணிக்கு மேற்படி வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் 'திராவிடன்' அலுவலகத்தில், சென்னை மாவட்டத் துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவனை ஆணையாளராகக் கொண்டு நிருவாகிகள் தேர்தல் நடைபெற்றது; அதுபோது, தோழர்கள் கே. எஸ். தினகரன் செயலாளராகவும், மா. இராசவேலு துணைச்செயலாளராகவும், நா. க. சாந்தலிங்கம் பொருளாளராகவும், எம். செங்கல்வராயன், கே. எஸ். சிவானந்தம், என். வி. என். சோமு, சோ. சுந்தரம், சிவபூஷணம் ஆகியோரை செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. நிருவாகிகள் தேர்தலுக்கு முன் வரவு—செலவு கணக்கை பரிசீலிக்கப்பட்டது.

சென்னை 37-வது வட்டம்:

5—5—57 பிற்பகல் 2-30 மணிக்கு சென்னை—இராயப்பேட்டை தி. மு. கழகப் பணிமனையில் தோழர் கோ. இளவரசு தலைமையில், கழகச் செயறகுழுக் கூட்டம் நடைபெற்றபோது, மாத வரவு-செலவு கணக்குகள் ஆண்டு விழாக் கூட்ட வரவு-செலவுக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொதுத் தேர்தலின் போது எல்லாவகையிலும் ஒத்துழைத்த கழகத் தோழர்களுக்கும் சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த தோழர்களுக்கும், தோழர் ஆசைத்தம்பிக்கு பெருவாரியான வாக்களித்து வெற்றி பெறச் செய்த வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டது. காலியான செயற்குழு இடத்திற்கு தோழர்கள் பொ. நா. சண்முகம், கோ. ச. நீதிமன்னன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டபின், வட்டத்தில் விளக்கு வசதி, சாலை வசதி, மலசலம் கழிப்பதற்குவேண்டிய வசதியின்மையைப் போக்க வட்ட நகரசபை உறுப்பினரிடம் நேரில் சென்று மேற்குறிப்பிட்ட குறைபாடுகளைப் போக்க கழகச் சார்பில் தோழர்கள் பொ. ஏழுமலை, ஏ. எல். கே. சாமி, பொ. நா. சண்முகம், ஏ. பி. சிவஞானம், கே. எஸ். தங்கவேல் ஆகியவர் களடங்கிய குழுவிடம் மனு (மகசர்) ஒன்று கொடுத்தனுப்புவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

சென்னை 44-வதுவட்டம்

5—5—57 காலை 10 மணியளவில், மயிலை தி. மு. கழக பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ந. செயராமன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் பி. இராமசாமி செயலாளர்—மாவட்டப் பிரதிநிதியாகவும், தோழர்கள் எம். முனுசாமி, சி. ஏழுமலை, கே. நாகப்பன், வேதாசலம், கமால் பாட்சா, ரங்கபாஷ்யம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுகும்மிடிபூண்டி:

5—5—57 இரவு 9 மணியளவில், தோழர் ஆ கிருஷ்ணன் இல்லத்தில் கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டம் தோழர் ஆ. கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: பி. ஆறுமுகம்; துணைச் செயலாளர்: குர்ரப்பன்; பொருளாளர்: தோழியர் சகுந்தலை-மணாளன்; மாவட்டப் பிரதிநிதி: சி. என். முனுசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: தோழர்கள் சுபான், நயினியப்பன், எஸ். பாபு, சி. துரைஅரசு, பாலசுப்பிரமணியம், பி. ஏழுமலை, ப. செ. தாயமணி, பி. இராமசாமி, சீராமுலு. எஸ். வீரபத்திரன், மு. கோவிந்தன், வெங்கடேசன், ந. கோ. மணாளன்.

பெங்களூர்-2. இராமச்சந்திரபுரம்:

5—5—57 காலை 10-மணிக்கு மேற்படி கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் வீ முத்து தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பி. கோ. கோபால் செயலாளராகவும், த. மு. தமோதரம் துணைச்செயலாளராகவும், கோ. கிருட்டிணன் பொருளாளராகவும், வீ. முத்து, மு. நடேசன் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், அ. சாமிதுரை, மு. அன்பழகன், கு. கேசவன், கு. கண்ணன், எஸ். கே. சாமி, கு. சி. துரைசாமி, ந. இராமசாமி, மு. இராமச்சந்திரன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கள்ளிமடை:

6-5-57-ல், கோவை மாவட்ட கள்ளிமடை கிராமத்தில் தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டது. தோழர் வி. பேச்சிமுத்து முன்னிலையில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : எம். சுப்புராசு; துணைச் செயலாளர் : க. தனராசு; பொருளாளர் : பழனிச்சாமி; மாவட்டப் பிரதிநிதி: கே. வி. வேலுமயில்; செயற்குழு உறுப்பினர்கள் : அ. கணேசன்; கிருஷ்ணன், மாரியப்பன், நடராசு, ஆறுமுகம், எம். ஆறுமுகம், எம். மாரிசாமி; ரங்கசாமி.

பின்னர் தோழர்கள் பேச்சிமுத்து, சி. மா. சுப்பிரமணியன், வேலுமயில், கிருஷ்ணன் ஆகியோர் தி. மு. க. இலட்சியங்களை விளக்கிப் பேசினர்.

உப்புலியபுரம்:

7—5—57 இரவு 9-30 மணியளவில், திருச்சி மாவட்டம் உப்புலியபுரம் தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல் தோழர் கை. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது; செயலாளர் : அழகாசன்; துணைச் செயலாளர் : மருதமுத்து; பொருளாளர் : அங்கப்பன்; மாவட்டப் பிரதிநிதி : சந்திரசேகரன்; செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் முத்து, ஆறுமுகம், சுப்பிரமணியன், சோலைமுத்து, துரைசாமி தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை—ஆலந்தூர்:

8—5—57-ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், இப்பகுதி மக்களின் சுகாதார நலனுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சுகாதார அதிகாரிகளையும் ஊராண்மைக் கழகத் தலைவரையும் வற்புறுத்தியதுடன், கழகத்தின் கோரிக்கைகள் பற்றி ஊராண்மைக் கழகத் தலைவரின் கவனத்திற்கு மீண்டும் நினைவுறுத்தியதுடன் மேலும் செயற்குழுத் தீர்மானத்தையொட்டி, தென் பகுதி இரயில்வே அதிகாரிகள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நன்றியறிதல் தெரிவித்துக்கொண்டது.

இலங்கை—பொரளை:

8—5—57 இரவு 7 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் வே. கா. திராவிடமணி தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பொருளாளராகத் தோழர் கே. காந்தியும் செயற்குழு உறுப்பினராக தோழர் எஸ். சங்கரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

9—5—57 மாலை 5 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் முல்லை ரகுநாதன் தலைமையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், தமிழ் நாடு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற அண்ணா, மற்றும் கழக சட்டசபை உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டித் தோழர்கள் செ. சுப்பிரமணியம், வே. கா. திராவிடமணி, இரா. செல்வராசு, எம். கரீகாலன் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

தண்டுரை பட்டாபிராம்:

10—4—57-ல் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் வரவு-செலவுகள் சரிபார்க்கப்பட்டதுடன், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர் : க. மு. பாபு; துணைச் செயலாளர் : பெருமாள்; பொருளாளர் : சோமு; செயற்குழு உறுப்பினர்கள் : எஸ். பி. சேதுராமன், எம். பக்தவத்சலம், த. து. சண்முகம், த. ரா. தி. அரசு, மலையமான்.

வளையப்பட்டி:

9—5—57 இரவு 7-மணிக்கு ஊர்ப் பொதுச்சாவடியில் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் பூ. வீரப்பன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் பெ. இராமசாமி செயலாளராகவும், மலைக்கருப்பன் துணைச் செயலாளராகவும், ச. நாய்க்கன் பொருளாளராகவும், ம. முத்துலிங்கம் மாவட்ட உறுப்பினராகவும், மற்றும் 6 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

என். வி. நடராசன் சுற்றுப்பயணம்

மேலும் புதிய கிளைகள் துவக்கப்பட்டன

வரிக் கொடுமைகளை எதிர்த்து தீவிர பிரச்சாரம்

★

பள்ளப்பட்டி:

மதுரை மாவட்டம், பள்ளப்பட்டி தி. மு. கழகச் சார்பில் 29—5—57 மாலை 6-30 மணிக்கு, மல்லயசாமி கோயில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ். எஸ். பாண்டியன் தலைமை வகித்தார். தோழர்கள் மதுரை-எஸ். முத்து, சந்தானம். முகதா ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியாகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், சர்க்காரின் புதிய வரிக் கொடுமைகளைக் கண்டித்தும், திராவிடம் தனி உரிமையுடன் வாழவேண்டியதை விளக்கியும் விரிவுரையாற்றினார்.

துவக்கத்தில் ஊர்வலமும் நடைபெற்றது. முக்கியப் பகுதிகளில் கழகக் கொடிகளைத் தோழர் என். வி. நடராசன் ஏற்றிவைத்தார். பல கிளைகளின் சார்பில் மலர்மாலைகள் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

கருப்பட்டி:

சோழவந்தான் அடுத்த கருப்பட்டி தி. மு. கழகத் துவக்க விழா 30—5—57 மாலை 6-30 மணிக்கு மதுரை வழக்கறிஞர் பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் சிறப்புற நடந்தேறியது. துவக்கத்தில் ஏராளமான மக்கள் கூடி ஊர்வலம் நடைபெற்றது. கழகக் கொடியும் துணைப் பொதுச்செயலாளரால் ஏற்றிவைக்கப்பட்டது.

பொதுக்கூட்டத்தில் வழக்கறிஞர் பார்த்தசாரதி அவர்கள் கடந்த கால அரசியல் நிகழ்ச்சிகளையும், தமது அனுபவத்தையும் விவரித்துக் கூறினார். அடுத்து தோழர்கள் டி. ஆவுடையப்பன், திண்டுக்கல் சமதர்மம் ஆகியோர் பேசியபின், கிளைக் கழகத்தைத் துவக்கிவைத்து என். வி. நடராசன் அவர்கள், காங்கிரஸ் ஆட்சியின் அட்டூழியத்தையும், நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை விளக்கியும் பேசினார். சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமானத் தோழர்கள் திரண்டிருந்தனர். மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

திருமானூர்:

திருச்சி மாவட்டம் டி. பழுவூர் அடுத்த திருமானூர் தி.மு.கழகத் துவக்க விழா 31—5—57 மாலை 7 மணிக்கு, போலீஸ் ஸ்டேஷன் அடுத்த திடலில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான கிராம மக்களும், விவசாயத் தொழிலாளர்களும் திரண்டிருந்தனர். துவக்கத்தில் தோழர்கள் குடந்தை-காளிதாஸ், பொ. தருமன், டி. பழூர் இராமசாமி ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் தி. மு. கழகம் அடைந்த வெற்றியினை விளக்கியும், விவசாயத் தொழிலாளர் பிரச்சினையில் தி. மு. கழகம் ஆற்றிவரும் பணியையும், புதிய வரிகளைக் கண்டித்தும் பேசினார். கிளைக் கழகங்கள், சார்பு மன்றங்கள் சார்பில் கைத்தறித் துணிகளும், மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

ஞாயிறு:

செங்கற்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம் ஞாயிறு கிராமம் தி. மு. கழகத் துவக்க விழா 1—6—57 சனி மாலை 6 மணிக்கு இனிது நடந்தேறியது. சுற்றுப்புறங்களிலிருந்து கழகத் தோழர்களும், விவசாயத் தொழிலாளர்களும் திரண்டிருந்தனர்; தோழர் கே. எம். சாகுல் அமீது தலைமை வகித்தார்.

தோழர் பால்வண்ணன் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். அடுத்து தோழர்கள் நாதம் டி. இராமசாமி, கே. வி. கே. சாமியின் படத்தைத் திறந்துவைத்தும், தங்கசாமி அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தும் பேசினார்கள்.

பிறகு, தோழர் வி. எஸ். கோவிந்தராசன் கழகக் கொள்கையை விளக்கிப் பேசினார்.

இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கி வைத்து விரிவுரையாற்றினார். கிளைக் கழகங்களாலும், உள்ளூர் பிரமுகர்களாலும் கைத்தறித் துண்டுகளும் மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன. செயலாளர் எம். தையூப் அனைவரையும் வரவேற்று துவக்கத்தில் பேசினார்.

ஆச்சான்புரம்:

தஞ்சை மாவட்டம் கொள்ளிடம் அடுத்த ஆச்சான்புரம் தி. மு. கழகத் துவக்க விழா 5—6—57 அன்று சிறப்புற நடந்தேறியது. மாலை 6 மணிக்கு ஊர்வலம் ஒன்று நடைபெற்றதுடன், என். வி. நடராசன் அவர்களால் கழகக் கொடிகளும் ஏற்றிவைக்கப்பட்டன.

மாலை 7 மணிக்கு, சிவன் கோயில் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. துவக்கத்தில் சீர்காழி தோழர்கள் சோமு, கோபாலகிருஷ்ணன் ஆகியோர் பேசினர். இறுதியாக என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத் துவக்கிவைத்து தற்கால அரசியல் நிலையையும், காங்கிரஸ் ஆட்சியின் கொடுமைகளையும், நம் தாயகம் தனி உரிமை பெற வேண்டியதின் அவசியத்தை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

அன்பளிப்புகள்

முக்கூடல் - தோழர் அப்பாதுரையவர்கள், தனது திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

மதுரைத் தோழர் சி. பால்ராசா அவர்கள் 7—6—57ல் நடைபெற்ற தனது தம்பியின் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

26—5—57ல், பெங்களூர் - சீராமபுரம் தோழர் சாமிதுரையின் மகவுக்கு 'சூரியகுமாரி' என்றும், தோழர் ராமன் அவர்களின் மகவுக்கு 'வெற்றிச் செல்வி' என்றும் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியவர்களால் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57ல், சென்னை - எழும்பூர் தோழர் எம். குப்புசாமி - தோழியர் ஆர். கோகிலாம்பாள் வாழ்க்கை ஒப்பந்த விழா தோழர் கே. முகில்வண்ணன் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் பலர் வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

2—6—57ல், பொன்பரப்பி தோழர் ந. முருகேசன் - தோழியர் அ. அலமேலு வாழ்க்கை ஒப்பந்த விழா நடைபெற்றது; தோழர்கள் பலரின் வாழ்த்துரைகளும் - நண்பர்களின் வாழ்த்திதழ்களும் மணமக்களுக்கு வழங்கப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அன்பளிப்புகள் அனைத்தும் வரப்பெற்றோம்; நன்றி-பொறுப்பாளர்.

தொழிலாளர் நிலை குறித்து அண்ணா

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

—ஆடை நெய்கின்ற தொழிலாளி அழகாக ஆக்கித்தந்திருக்கின்ற நல்ல சட்டையை அணிந்துகொண்டு அதற்கு மேலே நல்ல சரிகை துப்பட்டாவைப் போட்டுக்கொண்டு காற்றிலே அந்தத் துப்பட்டா ஆடுகின்ற நேரத்தில் பாட்டாளியை அவர்கள் ஒருகணமும் எண்ணிப்பார்ப்பதில்லை.

"ஆனால், படிக்கட்டில் விழுகின்ற நேரத்திலேயும் சரி— ஓடுகின்ற மின்சார விசிறி திடீரென நின்றுவிட்டாலும் சரி— ஆடிக்கொண்டிருக்கும் ஊஞ்சல் ஒரு தடவை அறுந்து கீழே விழுந்துவிட்டாலும்சரி — ஏறுவதற்குப் பயன்படுகின்ற படிக்கட்டு அவனை கீழே வீழ்த்துவதற்குப் பயன்பட்டாலும்சரி— அப்போதுதான் அவனுக்குத் தொழிலாளியின் கவனம் வருகிறது.

"அந்தக் கவனம் எந்த வகையில் வருகிறது என்றால், 'எந்த முட்டாள் இதைச் செய்தான்?—எந்தப் பக்குவமற்றவன் இதைச் செய்தான்?'— என்று அப்போதும் தொழிலாளியைத் திட்டுவதற்குத் தான் அந்த நேரத்தில் அது பயன்படுகிறது.

"ஆனால் உண்மையிலேயே தொழிலாளர்கள் தங்கள் தொழில் திறமையினாலே, உலகத்திற்குத் தேவையான உன்னதமான கருத்துக்களை — எண்ணங்களை — நேர்த்தியான ஏற்பாடுகளை — நாட்டுக்குத் தேவையான வாழ்க்கை வசதிகளை ஆக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இப்போது கடந்த 20, 25 வருட காலமாக ஓரளவுக்கு உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

டரைக் கேட்டு, அவரும் படித்ததை மறக்காமல் இருந்தால் அதை எடுத்துச் சொல்ல, அதன்படி வைத்து ஏர்க்கால் பூமியில் பாய்கிறதா இல்லையா என்று பார்ப்பதற்கு முன்னாலே படக்காட்சி சரியாகக் காமிராக்காரர்களால் பிடிக்கப்படுகிறதா இல்லையா என்று பார்த்துக் கொண்டே புன்னகையோடு நின்று, அது மறுநாள் பத்திரிகைகளில் வெளி வருகின்றதே — இதற்கு அந்த 'Diginity of Labour' என்ற தத்துவம் பயன்பட்டு வருகிறது. அதற்கல்ல, இத்தத்துவம் பயன்பட வேண்டியது"

அபிவிருத்தித் திட்ட வேலைகள் குறித்த அளவு நடைபெறவில்லை

அவசரக் கோலத்தால் பணமும் பாழாகிறது

சென்னையில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் இலட்சணம்

சென்னை, ஜூன் 17—

1956—57-ம் ஆண்டுக்கென நிர்ணயிக்கப்பட்ட அளவு வேலைகளை, பலதுறை அபிவிருத்தித் திட்டங்களில் சென்னை சர்க்கார் நிறைவேற்றவில்லை என்று கூறப்படுகிறது.

பல இலாகாவினர், நிர்ணயிக்கப்பட்ட அபிவிருத்தி வேலை அளவை செய்து முடிக்க முடியாமலிருந்தனர் என்பது, சர்க்கார் அலுவலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் ஒப்புக்கொள்ளப் பட்டதாம்!

இப்படி நிர்ணயித்த வேலைகளை மேற்கொள்ள முடியாமற் போனதற்குக் காரணம், தேவையான பொருள்கள் கிடைக்கவில்லை என்பதுடன், தகுந்த வேலையாட்கள் கிடைக்கவில்லை என்பதும் காரணங்களாகக் காட்டப்படுகின்றன.

ஆண்டு முழுதும் வேலை துடங்காமலிருந்துவிட்டு, கடைசி மூன்று மாதங்களில் அவசர அவசரமாக வேலையைத் துவங்குகிறார்களாம் : அதனால், பணம் பாழாவது தவிர்க்க முடியாது போய்விட்டதாம்!

இவை எல்லாம் முதல்வர் காமராசரின் தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

நகரசபை ஊழியர்களுக்குக் கிராக்கிப்படி உயர்வு

மார்ச் முதல் அமுலாகிறது

சென்னை, ஜூன் 17—

சென்னை நகரசபையில் வேலை செய்யும் எல்லா ஊழியர்களுக்கும் 1957 மார்ச் 1-ந்தேதி முதல் கிராக்கிப்படி மாற்றியமைக்கப் பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கு ரூ. 7 உயர்வளித்து கிராக்கிப்படி தரப்பட்டுள்ளதைத் தழுவியே இந்த முடிவு செய்யப்பட்டுள்ளதாம்.

அல்ஜீரியாவில் மனித வேட்டை!

500 தேசியவாதிகள் தலை கொய்யப்பட்டது

பிரெஞ்சுக்காரர் கொலைத் தொழில் தீவிரமாகிறது

அல்ஜியர்ஸ், ஜூன் 16—

"கடந்த வியாழன் முதல் ஞாயிறுவரை பிரெஞ்சு ஏகாதிபத்திய இராணுவத்தினர் 500-க்கும் அதிகமான அல்ஜீரிய தேசியவாதிகளின் தலையைக் கோய்தனர்"

—என்று இராணுவத் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது.

இந்த மனித வேட்டையில் பிரெஞ்சு விமானங்கள், பாரசூட் வீரர் படை இவை எல்லாம் ஈடுபட்டனவாம்!

அல்ஜீரியாவின் பிரதான நகரமான அல்ஜியர்சில் ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாம்!

உங்களுக்குத் தெரியுமா?

புதுடில்லி, ஜூன் 15—

இந்த ஆண்டில் எண்ணெய்க்கான மாதிரி நிலையங்கள் 45 நிறுவப்பட்டனவாம். சுமார் 2,000-க்கு மேற்பட்ட செக்குகள் இதில் ஈடுபட்டனவாம்.

குஷ்டரோகம் அறவே ஒழிக்கப்பட்டுவிடுமாம்

மாஸ்கோ, ஜூன் 17—

"இன்னும் 20 ஆண்டுகளில் ரஷ்யாவிலிருந்து குஷ்டரோகம் முற்றும் அகற்றப்படும்"

என்று 6-வது குஷ்டரோக மகாநாட்டில் ரஷ்ய சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

டெல்லியின் முடிவைக் கண்டித்து அசாம் சட்டசபைத் தீர்மானம்

அசாமிலேயே எண்ணெய் தொழிற்சாலை நிறுவ வற்புறுத்தல்

டெல்லி நியாயத்தை ஒப்ப மறுத்ததற்கு காங்கிரஸ் மந்திரியின் வருத்தம்

ஷில்லாங், ஜூன் 17—

"அசாமில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுவது தொழில் ரீதியில் சாத்தியமே என்பதுடன், இலாபகரமானதாகவும் இருக்கும் என்று நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். மேலும், மாநிலத்தில், தொழில்—பொருளாதார வளர்ச்சிக்கு அந்தத் தொழிற்சாலை நிறுவுவதும் மிக அவசியமாகும்; அத்துடன் இந்தத் தொழிற்சாலையை இங்கு நிறுவினால்தான் தொழில்துறை அபிவிருத்தியில் பல மாநிலங்களிடையேயும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறையமுடியும். டெல்லி சர்க்கார் இந்த நியாயத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை"

என்று, அசாம் சட்டசபையில் காங்கிரஸ்காரர்கள் கொண்டு வந்து, பி. சோ., கம்யூனிஸ்டுக் கட்சியினரின் திருத்தத்தோடு ஒருமனதாக நிறைவேறிய, 'அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவுமாறு மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்றுகோரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகையில் அசாம் நிதி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

'முன்பே தெரிவித்தோம்'

"இந்த மாநில மக்களின் கருத்தை முன்பே தெரிவித்தோம். அசாமில் தொழிற்சாலை இல்லை என்ற வகையில் செய்திகள் வெளியான போதே, தந்தி மூலம் டெல்லி சர்க்காருக்கு மாநில சர்க்காரின் கருத்தை அறிவித்தோம்; நேருவுக்கும் தந்தி கொடுத்தோம். ஜூன் 13-ந்தேதி பகலே இதுகுறித்துத் தந்தி மூலம் தெரிவித்தும், தங்கள் முடிவை, நேரு திரும்பி வரும்வரை ஒத்திவைக்கக்கூட டெல்லி மறுத்துவிட்டது"

என்றும், அந்த அமைச்சர் கூறியிருக்கிறார்.

உறுதிமொழியாம்!

அசாமின் கோரிக்கைபற்றி மீண்டும் நிபுணர்களைக் கொண்டு ஜூலைத் திங்களில் பரிசீலிப்பதாக மத்திய மந்திரி ஆசாத் அசாம் தூதுக்குழுவிடம் தெரிவித்திருக்கிறாராம்.

அந்த நிபுணர் குழுவுடன் கூடி விவாதிக்க அசாம் பிரதேசக் காங்கிரசுக்கு வாய்ப்பு தரப்படும் என்றும் ஆசாத் கூறினாராம்.

ஏமாற்றுவித்தையா?

ஏற்கனவே டெல்லி நியமித்த நிபுணர் குழுவினர், அசாமில் கௌஹாத்தியிலேயே இத்தொழிற்சாலையை நிறுவமுடியும் என்றும், சிபாரிசு செய்திருக்கின்றபோது, இன்று மீண்டும் நிபுணர் ஆலோசனை என்பது வெறும் ஏமாற்றுவித்தையே என்று அசாம் அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன என்று தெரியவருகிறது.

அத்தொழிற்சாலையை, அசாமில் நிறுவ ரூ. 48 கோடியும், கல்கத்தாவில் நிறுவ ரூ. 68 கோடியும் பிரௌனியில் நிறுவ ரூ 50 கோடிக்கு அதிகமாகவும் தேவைப்படும் என்றும் நிபுணர் குழு தெரிவித்திருக்கிறதாம்.

குறைவான மூலதனச் செலவுடைய அசாமைத் தேர்ந்தெடுக்காமல், பிரௌனியைத் தேர்ந்தெடுத்ததிற்கு டெல்லி கூறும் காரணம் எல்லாம், அசாமிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயைப் பிற பிரதேசங்களுக்குக் கொண்டு வருவது அதிகமான செலவினமாயிருக்கும் என்பதுதானாம்!

உழைப்பைக் குறைத்து மதிக்காதே!

"'உழைப்பை, குறைத்துப் பேசாதே' —(Dignity of labour)—என்ற வாக்கியத்தைப் பெரும் பெரும் அரசியல் தலைவர்கள் இன்றையத் தினம் தாரக மந்திரத்தைப்போல உபதேசிப்பதை நீங்கள் படிக்கின்றீர்கள். அவ்வாறு சொல்வதில் உள்ள கருத்தென்னவென்றால் 'உழைப்பிலே ஒரு மதிப்பு இருக்கிறது; உழைப்பில் இருக்கிற மதிப்பை குறைத்து மதிப்பிடாதே' என்று எல்லா அரசியல் கட்சிகளிலுமுள்ள தலைவர்களும் எடுத்துச் சொல்கிறார்கள். அது மறைமுகமாக பாட்டாளி சமுதாயத்திற்கு, முதலாளி சமுதாயத்தால் ஆட்டிப்படைக்கின்ற காசு செலுத்துகின்ற காணிக்கை என்று நான் வரவேற்கிறேன்.

"முதலாளிகளும், முதலாளிகளாலே ஆட்டிப்படைக்கப்படுகின்ற அரசுகளும் இன்றையத் தினம் உழைப்பின் மதிப்பையும், உழைப்பின் கீர்த்தியையும் ஓரளவுக்கு உணரத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

"உணரத் தலைப்பட்டவர்கள், அதை எந்த வகைக்குப் பயன்படுத்துகிறார்கள் என்றால், 'Diginity of labour' என்று எடுத்துச் சொல்லி —'உழைப்புக்கு மதிப்பளிக்க வேண்டும்' என்று சொல்லி, 'நானும் உழைக்கிறேன் பார்' —என்று பெரிய தலைவர்கள், ஏற்கனவே உழுதுவிட்ட வயலில், காமிராக்காரர்கள் வயலோரத்தில் நிற்க, பத்திரிகைக்காரர்கள் பாதையோரத்தில் நிற்க, பறந்து வருகிற பெரிய பெரிய தலைவர்கள் இன்னொரு பக்கத்தில் இருக்க, ஏர்க்காலை எப்படி வைப்பது என்று பக்கத்திலிருக்கிற டெமான்ஸ்டிரேட்

வடநாட்டில் துணிகர பகல் கொள்ளை

டிரைவர் படுகொலை; காஷியர் தப்பினார்

பம்பாய், ஜூன் 17—

பட்டப்பகலில் மத்திய பம்பாயில் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள ஒரு பகுதியில் ஆயுதம்தாங்கிய கொள்ளைக்காரர்கள் இன்று பம்பாய் அரசாங்கப் பால் பண்ணைக்குச்சொந்தமான பணம் வசூல் செய்யும் வண்டியைத் தடுத்துநிறுத்தி, ரூ. 15,000 கொள்ளையடித்துக்கொண்டுதப்பி ஓடிவிட்டனராம்.

டிரைவர் கொல்லப்பட்டார் என்றும், காவலாளி சுடப்பட்டார் என்றும், காஷியரும், சேவகரும் தப்பினர் என்றும் தெரிய வருகிறது.

நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல்

"நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தலும், நெல்லை மாவட்டத்தில் காலியாகியுள்ள பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தலும் 23—6—57 ஞாயிறன்று காலை 10-30 மணிக்கு தூத்துக்குடியில் தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்,"

என நெல்லை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் டபிள்யூ. டி. துரைசாமி அவர்கள் அறிவிக்கிறார்.

கழகக் கூட்டங்கள்

★

தொளசம்பட்டி:
(சேலம் மாவட்டம்)
அண்ணா திடலில்
20-6-57 மாலை 5-30 மணிக்கு
தலைவர் :
கு. கந்தசாமி
பேசுவோர் :
ப. கண்ணன்
இ. ஆர். கிருட்டிணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
கா. கு. சின்னுசாமி

★

திருப்புவனம்:
(மதுரை மாவட்டம்)
கழுவேத்தம்பொட்டல்
20-6-57 மாலை 6-30 மணிக்கு
தலைவர் :
நா. பொன்ராம்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
எஸ். முத்து
த. சோணையா

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ